80

# சுடர்

மாத இதழ்




• 80 காசு • அக். '87

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இந்தியாவில் வறட்சி

'இந்த நூற்றாண்டின் மிக மோசமான பருவமழைக் காலம்' இது. அதாவது 1987-ன் மழைக்காலம் முடிவடைந்து விட்டபோதிலும், 'மிக மோசமான' என்ற முத்திரையை 1987-ன் மீது இட வானிலை ஆராய்ச்சியாளர்கள் மறுக்கின்றனர். 'இந்த நூற்றாண்டின் மிக மோசமான பருவகாலம் இந்த வருடம் தானா இல்லையா என்பதை பருவகாலம் முடிவடைந்த பிறகுதான் கூற முடியும்' என வானிலை ஆராய்ச்சித் துறையின் இயக்குநர் டாக்டர் சார்கெர் கூறுகிறார்.

மழைக்குறைவினால் உண்டாகும் வறட்சி (Meteorological), நிலத்தடி நீர்க்குறைவினால் உண்டாகும் வறட்சி (Hydrological), பயிர் சரியாக விளையாததால் ஏற்படும் வறட்சி (Agricultural) என வறட்சியில் மூன்று வகைகளினாலும் இந்தியா தற்பொழுது பாதிக்கப் பட்டுள்ளது.

நூற்றுப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட வானிலை ஆராய்ச்சி நிலையம் 1877-ல் கடுமையான வறட்சி இருந்ததாக தகவல் தருகிறது. இந்த நூற்றாண்டில் 1918, 1965, 1972, 1979, ஆகிய வருடங்களில் மழைக் குறைவினால் வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. ஆனாலும் மேற்கூறிய வருடங்களில் ஒரு சில இடங்களில் பெய்த அதிக மழையினால் பற்றாக்குறை சிறிதளவே இருந்தது.

இந்த வருடத்தில் ஜுன் 1 முதல் ஆகஸ்டு 19 வரை நாடு முழுவதும் உள்ள 35 வானிலை ஆராய்ச்சி மையங்களில் 12 மையங்களில்தான் சாதாரண அல்லது அதிகமான மழை பதிவு செய்யப்பட்டுள்ளது. மற்ற 23 மையங்களில் சொற்ப மழை பதிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த சில வாரங்களில் மழை பெய்யக்கூடும் என வானிலை ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றனர்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## கோயில் அர்ச்சகர்கள்

திருப்பதி கோயில் அர்ச்சகர்கள் 1964-லேயே தமது பாரம்பர்ய குருக்கள் தொழிலை வெளி அர்ச்சகர்களுக்கு காண்ட்ராக்டில் விட்டு விட்டனர். இப்படி காண்ட்ராக்ட் எடுக்கும் அர்ச்சகர்கள் ரூ 20 லட்சம் வரை சம்பாதிக்கின்றர்.

இக்கோயிலின் பார்ம்பர்ய அர்ச்சகரின் குடும்பம் **1**-க்கு கோயிலிலிருந்து மட்டும் கிடைக்கும் வருமானம் ஆண்டுக்கு ரூ 42,0000. இவர்கள் வாழ்வது சென்னையில் உள்ள பெரிய பங்களாக்களில் இவர்களது ஏஜெண்டுகள் தான் கோயிலில் அர்ச்சகர் பணி செய்கின்றனர். பிரசாத விற்பனையில் 5-ல் ஒரு பங்கு பாரம்பர்ய அர்ச்சகர்களுக்குச் செல்கிறது,

கடவுளை தரிசிக்க லட்சக்கணக்கில் க்யூவில் காத்துக் கிடக்கும் பக்தர்களிடம் இவர்கள் அதிக தட்சனையை எதிர்பார்க்கிறார்கள். வற்புறுத்துவதும், அடித்து வாங்குவதும் உண்டு.

ஒவ்வொரு நாளும் 25 கல்யாண உற்சவங்கள் நடத்தப்படுகின்றன. அதற்காக வசதியான பக்தர்களிடமிருந்து ரூ 2500 வசூலிக்கப்படுகிறது. 25 கல்யாண உற்சவங்களுக்காக தேவஸ்தானத்திடமிருந்து பெறப்படும் பொருட்களை வைத்து ஒரு யங்ஞம் மட்டுமே நடத்தப்படுகிறது. மீதிப் பொருட்களை குருக்கள் கள்ளச் சந்தையில் விற்றுவிடுல்தாக கூறப்படுகிறது.

இப்படி வெளிச்சத்திற்கு வந்தவை சில, இருட்டில் நடம்பவை பல.

நன்றி ; கேரவன் — நிலா

---

**மாதம் ரூ. 2,000 வரை சுயமாக சம்பாதியுங்கள்**

எங்கள் பைனான்சிங் கம்பெனிக்கு பிக்ஸட் டெபாசிட் (FIXED DEPOSIT) சேர்த்துக் கொடுத்து மாத சம்பளத்தோடு மிகக்கவர்ச்சிகரமான கமிஷன் பெறலாம். சென்னையில் உள்ளவர்களுக்கு மட்டுமே இவ்வாய்ப்பு. முன் அனுபவம் உள்ளவர்களாயின் நன்று.

**மலர்ச்சி நிதி — AP 638, அண்ணா நகர், சென்னை-600 040** — Advt.

FREE E - BOOKS , www.thamizham.net.,

மக்கள் தலைவர்
கவனம், கவனம்!!
ஊனமுற்ற குழந்தைகளுக்கு
உடுத்த பட்டுத்துணி
காய்ந்த வயிற்றுக்கு
கண்கவரும் உணவுவகை
எல்லாமே..
எடுத்துப் பரிமாற,
மாலை நான்குமணி....
பரிவாரம் புடைசூழத்
தலைவர் வருகின்றார்.!
கவனம், மிகக் கவனம்!!
நேரம் நெருங்குகிறது...
நடைபாதைக் குழந்தைகளை
ஓரத்தில் விரட்டுங்கள்!
நடந்து போகும் மனிதர்களை
'லத்தி'க் கம்பாலே
அடித்துத் துரத்துங்கள்!
கருணையுள்ள நம் தலைவர்
கார்க் கதவில் புன்னகைத்து
வருகின்ற நேரமிது!
கொஞ்சம், கவனம்! கவனம்!!

—அனலேந்தி

## கவிதைகள்

சற்று முன் கிடைத்த செய்திப்படி
இதற்குமுன் சொன்ன
தகவல்
தவறானது
இந்த செய்தி உண்மைதானென்பது
அடுத்த தகவலை வைத்தே
அமையும்
வானிலை அறிக்கைகள்
ஆருடம் மாதிரி
பெய்வதும் பெய்யாததும்
மேகத்தைப் பொருத்து.

— நா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நீர்ப் போதை



நீர்ப்போதை என்பது அளவுக்கு அதிகமாக தண்ணீர் குடிப்பதால் ஏற்படும் ஒரு மயக்க நிலை. பொதுவாக 8-லிருந்து 12 லிட்டர் வரை தண்ணீர் குடிப்பதனால் தலைவலி, தலைச் சுற்றல், உடல்நலமின்மை, உடலில் பலம் குறைந்து விடுதல் போன்றவை ஏற்படுகின்றன. இதற்கு மேலும் நீர் அருந்தினால் வலிப்பு, எபபொழுதுமே ஒரு நினைவின்மை மற்றும் உயிருக்கே ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது.

சராசரியாக நல்ல உடல்வலிமை 'உள்ள வர்கள் ஒரு நாளைக்கு 2.5-3 லிட்டர் வரை தண்ணீர் அருந்தலாம். அவ்வாறு உட்கொள் ளும் நீரானது உணவுக் குழாய்களால் விரைவில் உறிஞ்சப்பட்டு உடலிலுள்ள இரத்தத்தில் சில நிமிடங்களிலேயே கலந்து விடுகிறது. இதன் விளைவாக இரத்தத்தின் அளவு அதிகரிக்கிறது. அந்த இரத்தத்தில் அதிக அளவு தண்ணீர் கலந்து விடுவதால் குறைந்த அழுத்தமுள்ள உப்பு நீராக மாறி விடுகிறது. இரத்த ஓட்டமானது மூளையின் அடிப்பகுதியை சென்று அடைந்து அங்கேயே தேங்கி விடுவதால் சளி போன்ற நிலை ஏற்படு கிறது. இதனால் மூளையிலிருந்து உடலுக்குச் செல்லும் பல உறுப்புகள் செயலற்றுப் போய் விடுகின்றன. சாதாரணமாக சில ஹார்மோன் (சுரப்பிகள்) சிறுநீரகக் குழாயினால் அதிக அளவு உறிஞ்சப் படுவதால் வெளியேறும் சிறுநீரின் அளவு குறைந்து விடுகிறது. அதே சமயத்தில் ஹார்மோன்களின் அளவு குறைந்து விட்டால் வெளியேறும் சிறு நீரின் அளவு அதிகமாகி உடம்பில் வெளியேறும் வியர்வை யின் அளவும் அதிகரிக்கிறது.

சோதித்துப் பார்த்ததில் ஒருவருக்குத் தாகம் இல்லாத போது அல்லது நீர் தேவை இல்லாமல் இருக்கும் போது 1500 மி. லி. நீரை குடிக்கச் செய்தால் சிறுநீர் அதிக அளவு வெளி யேற்றப் படுகிறது. 75% தண்ணீர் அருந்தினால் 4 மணி நேரத்தில் வெளியேறி விடுகிறது.

அதிக அளவு நீரை அடிக்கடி குடித்தால் சிறு நீரகம் (கிட்னி) அதிலுள்ள கழிவுப்பொருள் களை சுத்தபடுத்த முடியாமல் போய்விடும்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சாண்டில்யன்

**?இந்நாட்டில் கொடுக்கப்படும் பரிசுகளை தாக்கி வருகிறீர்களே...! உங்களுக்கு பரிசு தர மறுக்கிறார்களே என்கிற ஆவேசமா?**

!அப்படி இல்லை. பரிசுகள் நியாயமற்ற முறையில் வழங்கப்படுகின்றன. பரிசு பெற வேண்டுமானால் பல வேலைகளை செய்ய வேண்டியுள்ளது. சுயமரியாதையை விட வேண்டியுள்ளது. எனக்கும் பல பரிசுகள் கிடைத்திருக்கிறது. அதை நான் வெளியே சொல்வதில்லை. வாசகர்களின் பாராட்டைத்தான் நான் பெரும் பரிசாகக் கருதுகிறேன்.

**?நீங்கள் இரண்டாம்தர வாசகர்களுக்காகத் தானே எழுதுகிறீர்கள்.......?**

!அப்படி ஒரு ஜாதியை உருவாக்காதீர்கள். அரசியல் வாதிகள் உட்பட பலரும் மக்களை முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது தவறு, எனது கதையை ஒரு முறை ஒரு டீக்கடைக்காரர் விமர்சித்தார். ஒரு கதையில் பிரிதிவித் ராஜனைப் பற்றி எழுதியிருந்தேன். கதைநடக்கும் நூற்றாண்டில் பிரிதிவித் ராஜன் இருக்கவில்லை என்று மறுத்தார். தவறுதான் அடுத்தப் பதிப்பில் திருத்தப் படும், என்று திருத்தினேன்.

**? கதையை எப்படி எழுதுகிறீர்கள்?**

! சரித்திரங்களை நான் படிக்கிறேன். பிறகு கதை எழுத எங்காவது இடுக்கு இருக்கிறதா என்று தேடுகிறேன். கிடைத்தால் ஒரு ரவுண்ட் செய்து கொள்வேன். பிறகு திட்டம் எதுவும் இன்றி மனம் போன போக்கில் எழுதுவேன்.......

**? நீங்கள் எழுதுவதன் நோக்கம் சமுதாய சீர்திருத்தமா?**

: இல்லை! நான் மட்டுமல்ல. எவரும் எழுதவில்லை. இன்று எழுதப்படுவதெல்லாம் கேவலமான கதைகள். இந்தக் கதைகளை Translate செய்தால் வெளி மொழிக்காரர்கள் கேவலமாக நினைப்பார்கள்

— உதயம் ஏப்38'

FREE E - BOOKS , www.thamizham.net.,

**? திருக்குறள் மிகவும் சுருக்கமானதா?**

**கவிஞர் பாலா:** அப்படி சொல்ல முடியாது. செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச் செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை' இக் குறளில் முதல் மூன்று சொற்களிலேயே கவிதையின் அர்த்தம் வெளிப்பட்டு விடுகிறது. வெண்பா இலக்கண நிறைவிற்காக கடைசி 4 சொற்கள் இழுக்கப்பட்டிருக்கிறது.

**? சரித்திரத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் படிப்பினை என்ன?**

**வால்டேர்:** சரித்திரத்திலிருந்து மனிதர்கள் ஒன்றும் கற்றுக் கொள்ளவில்லை என்பது தான் சரித்திரத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் படிப்பினை.

# நீங்கள்

**? நீங்கள் யார்.......?**

**விவேகானந்தர்:** நான் ஞானியல்ல; ஏழை· எனவே ஏழைகளை நேசிக்கிறேன். லட்சோப லட்சம் மக்கள் பசியாலும் அறியாமையாலும் வாடும்போது அவர்களைப் பற்றி அக்கறையின்றி இருப்பவனைத் தேசத்துரோகி என்றே கருதுகிறேன். என்தேசம் குடிசைகளில் வாழ்கிறது. அந்தக் குடிசைக்குரியவர்கள்தான் காலங்காலமாக உழைத்து நாட்டின் செல்வத்தை உருவாக்குகிறார்கள். அதன் பலனை வேறு பிரிவினர் பெறுகிறார்கள்.

**? உங்கள் கதைகளைப் பற்றிக் கூறுங்கள்....**

**புதுமைப் பித்தன்:** எனது கதைகள் கலை உத்தாரணத்திற்கென்று கங்கணம் கட்டிக் கொண்டு செய்த சேவையல்ல. யாவும் கதைகள். உலகை உய்விக்கும் நோக்கமோ, கலைக்கு எரு விட்டுச் செழிக்கச் செய்யும் நோக்கமோ எனக்கோ என் கதைகளுக்கோ சற்றும் கிடையாது. நான் கேட்டது, கண்டது, கனவுகண்டது காண விரும்பியது, காண விரும்பாதது ஆகிய சம்பவக் கோவைகள் தாம் எனது கதைகள்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது ஜனநாயகம்

பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. சுற்று வட்டார கிராம வாசிகளுக்கு ஒரே சந்தோஷம். தான் ஓசி லாரியில் டவுனுக்குப் போய் தலைவரைப் பார்த்து விட்டு, இலவசமாக சாப்பிட்டு விட்டு, கையில் சுளையாக இருபது ரூபாய் பெற்றுக் கொண்டு லாரியிலே திரும்ப வருவது என்றால் சும்மாவா!

தலைவர் ஆக்ரோஷமாக உரையாற்றினார். ஊழலை ஒழிக்க வேண்டியதின் அவசியம் பற்றியும் அதில் பொதுமக்களின் பங்கு பற்றியும் வாயைத் திறந்தபடி கேட்டுக் கொண்டிருந்த கூலிப்பட்டாளக் கூட்டத்துக்கு வரப் போகும் இருபது ரூபாய் பேட்டாதான் நினைவிலிருந்தது.

இவர் முன்பு பண்ணிய ஊழல்கள் பற்றியோ, இப்போது மாட்டிக் கொண்டிருக்கும் ஊழல்கள் பற்றியோ எதுவுமே நினைவில்லை, அதுபற்றி அக்கறையுமில்லை அவர்களுக்கு.

அதோ திருடன் என்று கூட்டத்தோடு கோவிந்தா போடுவதால் திருடனும் நல்லவனாக மாறி விடுகிறான்.

நம் ஜனநாயகத்தின் பெருமைகளுள் இது தலையாய ஒன்று

— எம். பஷீர்


## வேல் டைப்பௌண்டரி

- புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- எல்லாவித அச்சக உபகரணங்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை,
சென்னை-7 தொ. பேசி. 27087

# மேதைகளும் வாசகர்களும்

இன்று நம்மிடையே தமிழ்ச் சமுதாயத்தில் ஒரு இலக்கிய மேதை அல்லது கணக்கு மேதை தோன்றிச் செயலாற்றிக் கொண்டிருந்தால் நமக்கு அவரை இனங் கண்டு கொள்கிற சக்தி இருக்கிறதா?

இது ஒரு அவசியமான கேள்வியாகவே இன்றுள்ள நிலைமையில் தோன்றுகிறது. சுப்பிரமணிய பாரதியார் என்று ஒரு கவிமேதை தோன்றியபோது ஏதோ பத்திருபது பேர் அவரை தெரிந்து கொண்டார்கள் என்பது உண்மைதான். இன்று பாரதியாரைப் பற்றி எல்லாம் தெரிந்தவர்கள் போலப் பேசுகிறவர்கள், பாரதியாருக்குச் சமகாலத்தவராக இருந்திருந்தால், தங்கள் பிழைப்பிற்கு அவர் உபயோகப்பட மாட்டார் என்று அறிந்து ஒதுங்கி நடந்திருப்பார்கள். இன்று பாரதியார் பெயரைச் சொல்லிப் புகழ் தேடிக் கொள்வதும், ஏதோ பெயர் பெறுவதும் சாத்தியமாக இருக்கிறது — செய்கிறார்கள். இப்போதும் பாரதியாரின் கவிதையின், வசனத்தின் இலக்கிய ஆத்மா, இவர்களில் பெரும்பாலோருக்கு தெரியவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

கணக்கில் மேதை என்றால் அது நிரூபிக்கக் கூடியது. இலக்கியத்தில் மேதை என்றால் அது முடிவான நிரூபணத்திற்கு உட்பட்ட விஷயம் அல்ல. இலக்கியத்தின் பாதிப்பு படிப்படியாகக் குறைந்து கொண்டிருக்கிறது. ஆனால் இலக்கியத்தின் தரம் பாரதியார் காலத்திலும், மணிக்கொடி, காலத்திலும், தினமணி காலத்திலும் இருந்த அளவுக்குக் குறையவில்லை. வாசகர்களின் தரம்தான் குறைந்து கொண்டே போகிறது.

—தினமணியில் க. நா. சுப்பிரமணியம்

---

'சுட்டி' வருட சந்தா ரூ. 10-00
ஆயுள் சந்தா ரூ. 150-00

FREE E - BOOKS , www.thamizham.net.,

திருப்பதி உண்டியல், திருப்பதி லட்டு பற்றிய செய்திகள் வியப்பைத் தந்தன. ஜெயகாந்தன் தூக்கிக் கொண்டிருக்கும் முரண்பாடுகளின் மூட்டையை சிறப்பாகக் காட்டியிருந்தீர்கள்...

—N. சண்முகம், திருவண்ணாமலை-2

கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு படத்திற்கு முன்பே பத்திரிகையாளர்களை அவமதிப்பது போல் காட்சி இருப்பது 'நீதிக்குத் தண்டனை' படத்தில். அதற்கு கண்டன குரல் எழுப்பாதது தான் மீண்டும் இந்நிலைக்குக் காரணம்.

—பொன். ராஜேந்திரன் முருங்கப்பேட்டை

40 ஆண்டுகளைக் கடந்த சுதந்திர வாழ்வின் அவலங்களை '40-வது சுதந்திர தின' செய்தித் தொகுப்பு உணர வைத்தது.

— எம். சம்பத், வேலாயுதம் பாளையம்

## வாசகர் எதிரொலி

அருண் நேரு கட்டுரை நன்று. விறு விறுப்பான பாணியில் எழுதியவருக்கு ஒரு சபாஷ்.

— எஸ். மூர்த்தி, மதுரை

'ஏடு கொண்டல வாடு' வருமானம் (ஏலம், லட்டு, விற்பனை, இதர வருவாய் உட்பட) ஆறிலிருந்து 10 லட்சம் என்கிறது 'டெக்கான் கிரானிகல்' (10—09—87) கடவுள் களிடையே ஏழை பணக்காரனா?

'தீண்டாமை' கவிதை பச்சை மிளா காய் கடித்தமாதிரி இருந்தது.

—எம். பஷிர், ஹைத்ராபாத்.

சோதிடந்தனை இகழ் கட்டுரை புதிய செய்திகளை தாங்கி வந்தது. அகதி களின் பட்டியல் கனமான விஷயம்.

— க. அரவிந்தன், நங்கநல்லூர்

---

கடம்

தொடர்பு முகவரி:
AP 638, H பிளாக், அண்ணா நகர்,
சென்னை—600040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பத்திரிகையுலக பித்தலாட்டங்கள்

'தினமலர்—வாரமலர்'—ஒரு வருடத்திற்கு முன்னால் நடத்திய சிறுகதைப் போட்டிக்கான முடிவை இன்னும் வெளியிடவில்லை என்று 'வாசகர் எதிரொலி' -யில் (ஆகஸ்ட்'87) ஒரு வாசகர் குறிப்பிட்டிருந்தார்.

இதே போல் 'தினசரி'—நாளிதழின் சார்பாக நடத்தப்படும் "சௌந்தர்யம்"—மாத இதழிலும் ஒரு சிறுகதைப் போட்டியை ஓராண்டுக்கு முன் நடத்தினார்கள். அவர்களும், இன்று வரை முடிவை வெளியிடவில்லை.

"தாய்"—வார இதழில், 6 மாதத்திற்கு முன் கோடைகாலப் போட்டி ஒன்றை அறிவித்தார்கள். இன்று வரை முடிவில்லை.

"குமுதம்"—பல மாதங்களுக்கு முன் 29 வயதானவர்களுக்கான சிறுகதைப் போட்டி நடத்தினர். (முடிவு வந்து விட்டது) தபால் தலைகள் இணைத்திருந்தும், இன்று வரை—தேர்ந்தெடுக்கப்படாத படைப்புகளை யாருக்கும் திருப்பி அனுப்பவில்லை. இப்படி ஒரு ஸ்டாம்ப் கொள்ளையா?

ஏற்கனவே சொன்ன "சௌந்தர்யம்"—மாதஇதழ்—தொடர்ந்து வாசகர்களுக்கு பரிசுப் போட்டி வைத்து முடிவுகளையும் வெளியிட்டது. ஒரு வருடத்திற்கு மேலாகியும் இது வரை ஒருவருக்கு கூட (பண) பரிசை அனுப்பி வைக்கவில்லை.

பாக்கெட் நாவலில் 5 எழுத்தாளர்களை கண்டுபிடிக்கும் போட்டி வைத்தார்கள். 72 பேர் பரிசு பெற்றதாகக் கூறி 68 பேர்களின் பெயர்களை மட்டுமே வெளியிட்டார்கள். "பரிசு பெற்றவர்களுக்கு 3 பாக்கெட் நாவல்களை அனுப்பி வைத்து விட்டேன்" என்று ஆசிரியர் அறிவித்திருந்தார். ஆனால் 5 மாதங்களுக்கு மேலாகியும் ஒருவருக்குக் கூட புத்தகம் வந்து சேரவில்லை.

'சாவி'—யில் பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சி' பற்றிய விமரிசனப்போட்டி வைத்தார்கள். பரிசு பெறும் ஒவ்வொரு படைப்பும் ரூபாய் ஐம்பது பரிசு பெறும் என்றும் அறிவித்தார்கள். ஆனால், அனுப்பியதோ 25ரூபாய் தான்.

— ஜே. ஐ. தயராஜ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

சஞ்சயின் மரணத்திற்கு பின் இந்திரா செய்தியாளர்களிடம் பேசும் போது, ''ராஜீவ் அரசியலுக்கு வரமாட்டார்'' என்று கூறினார். எனவே ராஜீவ் அரசியலுக்கு வரவில்லை. திணிக்கப் பட்டார்.

1984-பொதுத் தேர்தலில் ரீடிப்யூஷன் (Rediffusion) என்கிற அமெரிக்க பாணி விளம்பர நிறுவனம் ராஜீவை நமக்கெல்லாம் பரவலாய் அறிமுகப் படுத்தியது. இலட்சக் கணக்கில் தேர்தல் சுவரொட்டிகள் குமுதம் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

பிரதமராக ராஜீவுக்கு இருக்கும் தகுதிகள்: நேருவின் பேரர். இந்திராவின் மகன். சோனியாவின் கணவர். பிரியங்கா, ராகுலின் தந்தை. விமானம், வேன், கார், ஓட்டத் தெரியும். இவை போதாதா?

பதவியேற்றதும் சில நாட்கள் பிரதமர் பாத்திரத்தில் நன்றாக நடித்தார். மிகச் சிறந்த அரசியல் வல்லுனராகக் காட்டிக் கொண்டார். மேற்கத்திய கலாசாரத்தில் ஊறிய ராஜீவுக்கு இந்தியாவை அறவே பிடிக்கவில்லை. ஆகவே உலக நட்புறவு என்கிற போர்வையில் வெளி நாட்டிற்கு வானில் பறந்த வண்ணமிருந்தார். பிறகு வேடம் கலையத் தொடங்கியது. தேசத்தை 10-ஆம் நூற்றாண்டில் வைத்துக் கொண்டு 20-ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்வதாக அறிவித்தார். இது அண்ணாவின் படியரிசித் திட்டத்தை விட நகைப்பிற் குரிய தாகிவிட்டது. கூரை இல்லா இல்லங்களுக் கெல்லாம் தொலைக்காட்சிப் பெட்டிக்கு ஆர்டர் செய்தார். அதிலும் தானே தோன்றி நிகழ்ச்சி களை நிரப்பினார்.

போபோர்ஸ், ஃபேர்பாக்ஸ், நீர்மூழ்கி கப்பல் பேரம், அமிதாப் அஜிதாப் விவகாரம் இவை யாவும் திருவாளர் பரிசுத்தம் (Mr. Pure) என்கிற பெயரை ஸ்ரீமான் அசுத்தம் என்றாக்கியது.

ஊழலை வெளிகொணரும் பத்திரிகைகளை மிரட்டுவதும், கேள்வி கேட்பவர்களை குரைக்கிற நாய் எனக் குற்றம் சுமத்துவதும் இவரை இனிக் காப்பாற்றாது.

— நா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## பாரதி பற்றி . . .

பக்தி சிரத்தையுடன் நான் பாரதியை அணுகவில்லை. என்னுடைய அகராதியில் அப்போது பக்திக்கு இடமும் இல்லை. மேலும் நான் ஒரு 'சோட்டா' எழுத்தாளனும் அல்ல. உலகு தழுவிய பார்வை என் உள்ளங்கையில் இருக்கிறது. சமூகவியல் பொருளாதாரம் முதல் சிற்பக் கலை, சங்கீதம், இலக்கியம் ஈறாக திட்டவட்டமான முடிவுகளை அளிக்கவல்ல சித்தாந்தம் அது. இந்தச் சித்தாந்தப் பார்வையில் பாரதி எந்த அளவு தேறுகிறார் என்பதைக் காணவே நான் பாரதியை அணுகினேன். புரட்டி பார்க்குமிடத்து, முடிவில் ஏதோ ஒரு சில பாடல்களே ஏற்றுக்கொள்ளும்படியாக இருந்ததாக ஞாபகம். அவற்றிலும் ஒரு தெளிவைக் காணோம். முற்போக்காகச் சொல்லி வரும் போதே குடை சாய்ந்து பக்திச் சேற்றில் விழுந்து திசை திரும்பி எங்கெங்கோ சென்று விடுவது எனக்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தந்தது. தன்னிடமிருந்த அரிய கவிதா சக்தியை முழுக்க முழுக்க பாட்டாளி வர்க்கத்திற்காகப் பயன் படுத்தியிருக்கலாகாதா என எண்ணி விசனமுற்றேன்.

**சுந்தர ராமசாமி**

ஒரு மார்க்ஸிஸ்ட் ஆச்சாரியரிடம் இதுபற்றி முறையிட்டபோது, பாரதி முற்போக்காளன் என்றாலுங்கூட, ஒரு பூர்ஷ்வாதான் என்றும், முற்போக்கான பூர்ஷ்வா என்றும், முற்போக்கான பூர்ஷ்வா ஒரு மார்க்ஸிய முற்போக்குவாதியான அவரைப் போலவோ என்னைப் போலவோ முற்போக்காக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது என்றும் சொல்லி என்னை சமாதானப்படுத்தினார். தொடர்ந்து பல அறிவுரைகளும் தந்தார். எனினும் எனக்கு பூரண திருப்தி ஏற்படவில்லை. கடைசியில் நான் பாரதியை அவன் வாழ்ந்த காலத்தைக் கருதி—மார்க்ஸிய சித்தாந்தம் இந்தியாவில் பரவியிராத அக் கொடிய காலம்—மன்னிக்கத் தயாராக இருந்தேனே தவிர ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# திருப்பதி மொட்டை


திருப்பதியில் மொட்டை அடித்துக் கொள்வது ஒரு பிரார்த்தனை. புஷ்கரணி குளத்தில் குளித்து விட்டு கல்யாண கட்டத்தில் உட்கார்ந்து மொட்டை அடித்துக் கொள்கிறனர். எல்லாத் துறைகளையும் போல ஆண்களுக்கு சமமாகப் பெண்களும் புண்ணியம் தேடி தங்களது நீண்ட கூந்தலை வெட்டிக் கொள்கின்றனர்.

மொட்டை அடித்துவிட சவரத் தொழிலாளர் அநேகர் இருப்பினும் இங்கும் பெரிய க்யூ வரிசைதான் ஆனால் லஞ்சம் கொடுத்தால் நாம் தங்குமிடத்திலேயே மொட்டை அடித்துக் கொள்ளலாம்.

தலைமுடி அமினோ அமிலம் தயாரிப்பில் மிகவும் பயன்படுகிறது. அதுவும் நன்கு எண்ணெய் தேய்த்து வளர்க்கப்படும் இந்தியர்களின் தலைமுடிக்கு இத்தொழில் ஏக கிராக்கி. அவ்விதம் கடவுளுக்காக பராமரித்து வளர்த்து திருப்பதியில் அதிக அளவில் காணிக்கையாக்கப்படும் இந்த தலைமுடியும் ஒரு வருவாய் ஊற்று தான்.

ஒருமுறை இக்கோயில் நிர்வாகத்தினரின் அனுமதி பெறாமல் தலைமுடியை விற்று விட்ட சவரத் தொழிலாளி ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டார். பிறகு ஒரு அமைச்சரின் சிபாரிசினால் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

தலைமுடி கீழேவிழுந்து விட்டால் மக்களுக்கு அருவெறுப்பைத்தருகிறது. திருப்பதியில் விழும் தலைமுடியோ கணிசமான அளவு வருவாய் தரும் கறுப்புத் தங்கமாக மதிக்கப்படுகிறது.



நன்றி: கேரவன் — நிலா.

ஆசிரியர்: கு. நாராயண பாரதி,
வெளியிடுபவர்: கி. இராமச்சந்திரன்,
அச்சிடுபவர்: எம். எஸ். ரவீந்திரன்,
ரவீந்திரன் பிரஸ், 137 டாக்டர் நடேசன் ரோடு
சென்னை-600005.
முகவரி: 1494, அண்ணா நகர்,
சென்னை-600040

FREE E - BOOKS , www.thamizham.net.,

# விழியை விழுங்கும் விளம்பரங்கள்

பொடி முதல் புகையிலை வரை, சோப் முதல் சொகுசு கார் வரை எதையும் இன் விளம்பரம் செய்யாமல் விற்க முடியாத சூழலி மனிதன் விழித்துக் கொண்டிருக்கிறான்.

இந்தியாவில் மட்டுமல்ல; உலகத்தி எல்லா திசைகளிலும் விளம்பரக்கலை என்ப மக்களின் விழிகளையும் காதுக்களையு விழுங்கிக் கொண்டிருக்கிறது!

கபில்தேவ் வேகமாக பந்து வீசுவதற் அவரின் உடல் உறுதியும் விடாத பயிற்சியு காரணமாக இருந்தாலும், எங்களின் பானத்தை அவர் உறிஞ்சுவதால்தான் வெற்றிகளை குவிக்கிறார் என்றும், எங்களின் எண்ணெ தடவுவதால் தான் ரோனல்டு ரீகனின் தல முடி கொட்டாமல் உள்ளது என்றுப் "மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கு முடிச்சு போடுவது" போன்ற விளம்பரங்க "புற்றீசல் போல" பொல பொல என நாளுக் நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. இதனா படிக்காதவர்கள் முதல் படித்தவர்கள் வ வேண்டாத பொருட்களையும், அழகு சாதன களையும் கையிலும் பையிலுமாக சுமந் வண்ணம் திரிகின்றனர்.

மக்கள் தானாகவே முந்தி ஓடி வாங் வார்கள். தற்போது பல கம்பெனிகள் பொ ளின் தரத்தைக் கூட்டுவதில் கவனம் செலுத் வதைவிட, விளம்பரத்திற்காக மாதம் ஒன்றிற் பல லட்சம் ரூபாய் வரை செலவழித் "அழகிய வண்ணம், அழகான உருவம் இவற்றால் ஜோடித்து களிமண்ணைக்கூட காயகல்பம் என விற்பனை செய்கிற மோ மஸ்தான் வேலையை செய்கின்றன.

மக்கள் போலி விளம்பரங்களைக் கண் ஏமாறாமல் பொருள்களின் தரத்தை அறிந் வாங்கவும் சில கம்பெனிகளும் விளம்பரத்தி அதிக கவனம் செலுத்துவதை விட தா உற்பத்தி செய்கின்ற பொருள்களின் தரத்தி கவனம் செலுத்தவும் முயற்சிக்க வேண்டும்.

— S.

FREE E - BOOKS , www.thamizham.net.,

ப்ரவரி 17 "சார் நீங்க ரவிதானே?"
ன்றாள்.

சிறுகதை

ஆமாம் என்னை உங்களுக்கு
ப்படி தெரியும்?"

நேத்து உங்கக் கூட்டம் கேட்டேன். ரொம்ப
ற்புதமாய் பேசினீங்க. பெண்ணடிமை, மூட
ம்பிக்கை, வரதட்சணை கொடுமை பத்தி பேசி
து என்னை பாதிச்சுது. உங்களைப் போன்ற
ற்போக்கான இளைஞர்கள் நாட்டுக்குத்
தவை. நான் க்வீன் மேரீஸ்ல படிக்கிறேன்,
ான் எதையும் நேரடியா கேட்டுடுவேன். ஐலவ்
ஸார்........."

ூன் 15 "கடந்த நாலு மாசமா நாம
ழகறோம். முற்போக்கு அது இதுன்னு பேசி
ாலங்கழிச்சிட்டோம். சரி, போகட்டும். இனி
ஜ வாழ்க்கைக்கு வருவோம்."

"சரிங்க......"

"உங்கப்பா எங்க வேலை
செய்றார். எவ்வளவு
ம்பாதிக்கிறார். வீடு வாசலெல்லாம் எவ்வளவு
தறும்......"

ூலை 7 "கவிதா, என்னுடைய எழுத்து
பச்சு இவையால மாசத்துக்கு 1000-க்கு மேல்
கடைக்காது. கல்யாணத்திற்குப் பிறகு நீ
வலைக்குப் போகலாம். என்னுடைய மேல்
ட்ட செல்வாக்கை வச்சு வேலை வாங்கி
ர்ரேன். கூட்டங்களுக்கு உன்னை நான்
ழைச்சுக்கிட்டு போவேன். அப்போ நெறய
கை போட்டிருந்தா உனக்கு கௌரவம் தானே!
ருபது பவுன் போடச் சொல்லு........"

"சரி, ரவி......"

"கவிதா தயவு செய்து என்னோடபேர்
சொல்லாதே. பேர் சொன்னா கணவனோட
ஆயுள் குறையுமாமே!"

ஆகஸ்ட் 15 கடற்கரையில் 2 மணிநேரமாக
ரவி காத்திருந்தான். பத்து நாட்களாகவே
சொன்ன மாதிரி வரவில்லை. நேரத்துக்கு வரு
வாளே! அலைகளை எண்ணி எண்ணி மனம்
வலித்தது. வருவோர் போவோரை உற்றுப்
பார்த்து விழிகள் எரிந்தன. எழுந்தான்.

—ஸ. ஜெ. சூர்யா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இலக்கியவாதிகளின்

## சினிமா மோகம்

முன்பு—

படிப்பறிவில்லாத பாமரர்களை அலை
கழித்தது சினிமா மோகம்

இப்போது—

கற்றோர்களையும், ஒரு சமூகத்திற்கே நியாயம் கற்பிக்கும் இலக்கிய வாதிகளையும் அலையிடைத் துரும்பாக அலைகழிக்கிறது.

சினிமா கொடுக்கிற விளம்பரமும், பொரு ளாதார வசதிகளும்தான் ஒரு கலைஞனின் உச்சபட்ச வளர்ச்சியா?

ஒரு எழுத்தளானின் சாகாத படைப்புகள் தான் அவன் வளர்ச்சிக்கான சரியான சாட்சி யங்கள்.

இலக்கியவாதி தன் சமூக மக்களின் உணர்ச் சிகளைச் சுமந்து செல்லும் தூதுவன். அவர் களின் எண்ண ஓட்டங்களை மாற்றியமைக்கும் மறைமுகத் தலைவன். தன் சமூகத்தின் கௌர வத்தைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன்.

இன்று ஒரு எழுத்தாளன் சினிமாக் கோட்டையின் சுவர்களை நாகரீகமான முறை களில் ஊடுறுவ முடியவில்லை, சமூகமானத்தைக் காப்பாற்ற வேண்டியவன் சுயமானத்தைக் கூட காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை.

சினிமா என்னும் ஆக்டோபஸ் தமிழ் சமூகத்தின் வாழ்வை, அதன் பொருளா தாரத்தை, கலாச்சாரத்தைப் பல முனைகளி லும் தாக்கி மெல்ல மெல்ல உண்டுவருகிறது அந்த பயங்கரம் நம் இலக்கிய வாதிகளையும் பிடித்து கொண்டதால் அவர்கள் தகுதியில்லாத வர்களுக்கெல்லாம் அருவருப்பான முறையில் ‘ஜால்ரா’ தட்டி வருகிறார்கள்.

நாலு, டூயட், இரண்டுசண்டை, ஒரு கற்பழிப்பு, கொஞ்சம் ‘காமD’ இடையில் கவர்ச்சி நடனம் என்று சில ஆயிரம் அடி ஃபிலிம் சுருளை நிரப்பிக் கொடுக்க ஒரு இலக்கிய வாதி தேவையில்லை. அவனது திறமை டம்ளரில் தூண்டில் போட்டுக் காத்திருப்பதற்கு விரய மாகலாமா?

—ருக்மணி குமாரன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுதந்திர நாட்டின் அடிமைகளா?

கிராமம்—நாட்டின் முதுகெலும்பாம். அந்த முதுகெலும்பு எவ்வளவு வளைந்து, மெலிந்து, தளர்ந்து இருக்கிறது என்பதற்கு கிராமப்புற அஞ்சல் ஊழியர்களே சாட்சி கிராமபுற, கிளை அஞ்சல்களில் பணிபுரியும் (EDA) தபால்காரர்களுக்கு ஒரு கடிதம் பட்டுவாடா செய்ய கணக்கிடப்பட்டுள்ள கால அளவு 2 நிமிடம். ஆனால் தபால் நிலையத்திலிருந்து திசைக்கொரு புறம் கிலோ மீட்டர் வித்தியாசத்தில் உள்ள முகவரிகளுக்கு கடிதம் பட்டுவாடா செய்ய வேண்டுமென்றால் 2 நிமிடத்தில் பட்டுவாடா செய்வது என்பது எப்படி சாத்தியமாகும்? காலை 8-30 மணியிலிருந்து 11-30 மணி வரை இவர்கள் வேலை நேரம். என்றாலும் கூட பணியை முடிப்பதற்குள் மதியம் 2 மணி கூட ஆகிவிடுகிறது. அதாவது, 2-30 மணி நேரம் அதிகமாக பணியாற்ற வேண்டியிருக்கிறது. ஏறத்தாழ குறிப்பிட்டுள்ள கால அளவு போல் ஒரு மடங்கு அதிகமான நேரம் உழைக்கிறார்கள். ஒரு கடிதம் (15 பைசா கார்டு) போய் சேரவில்லை என்றால் கூட குற்றம் காட்டி எழுதுபவர்களுக்காக இவர்களை கடிந்து கொள்பவர்கள் இந்த நிலைமாற வழி செய்வார்களா? நகர புறங்களிலும்—கிராமப்புறங்களிலும் பணியாற்றுகிறவர்களின் சம்பளத்திலும் வித்தியாசமுள்ளது. ஒருவர் பட்டுவாடா செய்யும் தபால்களை கணக்கெடுப்பதும்—தபால் போக்குவரத்து குறைவாய் உள்ள நாட்களில் இவர்கள் பகுதி நேரங்களில் வேறு வேலையும் செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள். சம்பந்தப்பட்டு குறை நீங்க வழி செய்வார்களா?

—மறுமலர்ச்சி பித்தன்

---

★ சுட்டி வாசகர் இயக்க விண்ணப்பம் பெறாதவர்கள் எழுதுங்கள்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# லாட்டரி – ஒரு சூதாட்டம்

● 1966—ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திற்காக கேரள அரசு லாட்டரியைத் துவக்கியது இந்த சூதாட்ட வெற்றியைக் கண்டு காஷ்மீரைத் தவிர மற்ற மாநிலங்களும் களத்தில் இறங்கி யது இதன் விற்பனை சக்கை போடு போடு கிறது.

● 'பலரிடம் பறித்துச் சிலரிடம் தரும்' இச் சூதாட்டத்தில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. இந்தியாவில் தயாராகும் லாட்டரிச் சீட்டில் பாதிக்குமேல் தமிழ்நாட்டில் விற்பனையாகின் றன.

● 1982—ஆம் ஆண்டு பம்பாயைச் சேர்ந்த நிறுவனத்தின் ஆய்வில் லாட்டரிச் சீட்டு வாங்கு பவர்கள் 73% படிப்பறிவில்லாதவர்கள் என்று கூறியது.

● லாட்டரியிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் 25% சீட்டுகளை விற்பனை செய்பவர்களின் கமிஷனாகவும், 10% நிர்வாக செலவுக்கும், 25% அரசுக்குவருமானமாகவும், 40% பரிசுகளாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. அரசின் வருமானம் (25%) என்கிற ரீதியில் இதை நியாயப்படுத்த முடியாது.

● தமிழ்நாடு, குஜராத் போன்ற மாநிலங் களைத் தவிர பல மாநிலங்களில் தனியார் அச்சுக் கூடங்களில் போலிச் சீட்டுகள் தாராளமாக நடமாடுகின்றன பல தனிமனிதர்களும் லாட்டரி நடத்தும் நோக்கம், லாட்டரியில் நஷ்டக் கணக்குக் காட்டி வருமானவரியிலிருந்து தப்பி விடுவதே! பல நேரங்களில் இந்தத் தனியார் லாட்டரி முடிவுகள் வெளிவருவதேயில்லை.

● 1981—ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் லாட்டரியை நடத்துவது சமுதாய வளர்ச்சிக்கு உகந்ததில்லை என்று சுட்டிக் காட்டியது. லாட்டரியைச் சூதாட்டம் (Gambling) என்றே கூறியது. 1985-ஆம் ஆண்டு லாட்டரிகள் வரையறைகளைக் கடந்து செல்வதாகக் கூறியது. அதோடு 1-லட்சத்திற்கு மேல் பரிசு தொகைகள் இருக்கக் கூடாது என்றும் வலியுறுத் தியது. இதைப் பற்றி யாரும் அக்கறை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மொழிவழிப் பண்பாட்டு அழிவு

மொழி, மாந்தன் நினைப்பவற்றை மற்றவர்க்கு எடுத்துச் சொல்லும் ஒரு தொடர்புக் கருவியே, அதற்குமேல் மொழிக்கு முதன்மை கொடுப்பது பேதைமை என்று பலர் எழுதுகின்றனர்; பேசுகின்றனர். ஆனால் ஆழ்ந்து நோக்கின் தமிழர் போன்ற-நூற்றாண்டுகளாக தாய்மொழிக் கல்வியறிவு கூட இல்லாமல் ஒடுங்கிக் கிடக்கும் மக்கள் சமூகத்திற்கு மொழி ஒரு தொடர்புக் கருவி மட்டுமன்று; அதற்கும் மேலான உடைமை—உயிர் என்பது புலப்படும். வரப்பில் நின்று வயலில் வேலை செய்யும் உழவனைப் பார்க்கும் முதலாளிக்கு உழவனின் கையிலுள்ள மண்வெட்டி ஒரு கருவியாகத் தான் புலப்படும் ஆனால் அந்த உழவனுக்கு மண்வெட்டி வெறும் கருவி மட்டுமன்று; அதுவே அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் சோறு போடும் கடவுள். அவன் பார்வையில் மண்வெட்டி ஒரு கடவுள் தான்.

கம். அறவாணன்

அவன் பிள்ளைகள் முதன் முதலாகப் பள்ளிக்குச் செல்ல நேருகையில் பிள்ளை வீட்டில் பேசிய மொழியைப் பள்ளியில் பேச முடியாது; பேசக் கூடாது. ஆக அடுத்து வரும் தலைமுறையும் ஆங்கிலம் தெரிந்த கூட்டத்திற்கு முன் தாழ்ந்து நிற்கும்.

அந்த அப்பாவி மக்கள் கடவுளிடம் முறையிடக் கோயிலுக்குச் சென்றார்கள், சென்றவர்கள் வெளியே நிறுத்தப்பட்டனர். அர்ச்சனைக்குரிய காசுகளைக் கொடுத்து விட்டுக் கைகட்டி வாய்புதைத்து நின்றனர் அம்மக்கள். கடவுள் முன்பு ஏதேதோ முணு முணுக்கப்பட்டது. அந்த மொழியும் அவனுக்குத் தெரியாது.

அவன் வீட்டில் அவனுடைய பிள்ளைகளுக்கு அவன் செலவில் திருமணம் நிகழும் போது கூட சொந்த மொழியில் மண நிகழ்ச்சியை நடத்த அவனால் முடியாது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வி. பி. ஜெ. பி ஆவாரா?

மணிமுடி, போர்வாள், ஜெபமாலை—இவையெல்லாம் மிகப்பெரிய சக்திகளாக உலகை ஆட்டுவித்ததுண்டு. இன்றைய நவீன உலகின் மிகபெரிய சக்தி—கறுப்புப் பணம்தான்! கறுப்பு பண மன்னர்களின் தலைநகரம் ஸ்விட்சர்லாந்து. இவர்களோடு மோதி தன் மந்திரி பதவியை வெற்றிகரமாக இழந்தவர்: **விஸ்வநாத் பிரதாப்சிங்.**

யார் இந்த வி. பி. சிங்? உ. பி யில் பிறந்து அங்கு முதலமைச்சராக இருந்து, கொள்ளையர்களோடு போராடிநெஞ்சுரத்தோடு தோல்வியை ஒப்புக் கொண்டவர். இந்திரா இவரை மிகவும் மதித்து மத்திய அரசிற்குள் அழைத்து கொண்டார். பொருளாதார விஷயங்களில் இவரின் செயல்பாடுகளை புகழாதவர்கள் யாருமில்லை. இவரது நிதிநிலை அறிக்கையை பல்கிவாலா உட்பட அனைவரும் பாராட்டியிருக்கிறார்கள்.

பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக மாற்று அரசாக இயங்கும் செல்வர்களின் கணக்குகளை பரிசீலித்தது, வரிஏய்ப்பு நடவடிக்கை, கறுப்புப் பணத்திற்காக சிறை என்றெல்லாம் ஆரம்பித்து கிர்லோஸ்கரையும் கூண்டுக்கிளியாக்கியது அனைவரையும் அதிரவைத்தது.

போஃபர்ஸ், பேர்பாக்ஸ் அமிதாப் அஜிதாப் விவகாரங்கள் வி. பி. சி.யை உச்சத்தில் கொண்டு சென்று விட்டன. இவர் கொட்டும் மழையில் பேசினாலும் கூட்டம் குறைவதில்லை.ஒரு கட்சித் தொண்டர் காலமான போது அவர் பிணத்தை தூக்கிச் சென்றார் மயானம் வரை.

உளவு இலாகா அத்தனையும் தன் கையில் வைத்திருக்கும் ராஜீவ் ராஜபரம்பரையைச் சேர்ந்த வி. பி. சிங்கை ஒழித்துக் கட்டிவிட முயன்று வருகிறார். ஊழலை எதிர்த்த ஜெ. பி. யைப் போல் வெற்றி பெறுவாரா?

— ரவுஸ்பாரத்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நியூஸ் ரீல்

செய்திச்சுருள், வார் ரீல் என்று பல பெயர்களில் அழைக்கப்படும் நியூஸ் ரீல்—

அரசாங்கத்தின் பிரச்சார பீரங்கி.

அதன் கவர்ச்சி மிகுந்த கொள்கைப்பரப்பு செயலாளர்,

பத்திரிக்கை விளம்பரம் போல் இது ஒரு சினிமா விளம்பரம்,

பத்திரிக்கைகளில் அரசு விளம்பரம் வந்தால் கட்டணம் உண்டு. ஆனால் செய்திச் சுருள் திரையிடப் படுவதற்கு கட்டணம் கொடுப்பதில்லை. அதனால் பல சமயங்களில் (குறிப்பாகப் பண்டிகைக் காலங்களில்) திரையிடப்படுவதில்லை.

திரையரங்குகளில் பார்வையாளர்களிடம் இதற்கு எந்த மரியாதையும் இல்லை. 'எப்போது முடியும் இது' என்று சிலர் குட்டித்தூக்கம் போடுகிறார்கள். புகைபிடிக்க சிலர் வெளியேறி விடுவார்கள். பெண்கள் 'சலசல' வென்று அரட்டை அடிப்பார்கள். எந்தத் தரப்பு மக்களிடம் இருந்தும் இதற்கு ஆதரவு இல்லை. சொல்லப் போனால் இதற்குக் கொட்டியழும் கோடிக் கணக்கான ரூபாய்கள் விழலுக்கு இறைத்த நீர்.

இதற்கு திரைப்படம் (*Main Feature*) பார்க்குப் ஆவல் ஒரு காரணமாய் இருக்கலாம். ஆனால் தனியார்துறை விளம்பரப் படங்களில் சில விரும்பிப் பார்க்க படுகின்றன. அந்த அளவுக்கு அவைகவனமாக பொதுமக்களை ஈர்க்கும் விதத்தில் தயாரிக்கப் படுகின்றன. ஆனால் அரசின் செய்திச் சுருள்களில் கலா உணர்ச்சியின் ரேகையைக் கூட காண முடிவதில்லை.

ஒரு காலத்தில் போர் பற்றிய செய்திகளே காண்பிக்கப் பட்டதால் *War Reel* என்று அழைக்கப்பட்ட நியூஸ் ரீலில் இப்போது ராஜீவின் சுற்றுப் பயணங்களே பிரதானமாக காண்பிக்கப் படுவதால் இனிமேல் அதை *Rajeeve Reel* என்று அழைக்கலாமா?

— பிருந்தாசாரதி

FREE E - BOOKS , www.thamizham.net.,

## பைத்தியக்காரர்களா?

★ ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருந்த நேரம் 'ஆசிரியர்களின் வேலை நிறுத்தத்தினால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறதே!?' அரசின் நிலையென்ன என்று பிரதமரிடம் கேட்டபோது அவர் கூறிய பதில் :

'எனக்குத் தெரியாது. கல்வி இலாகா மந்திரி நரசிம்மராவிடம் கேளுங்கள்'

நல்ல வேளை நம்பிரதமருக்கு நரசிம்மராவ் தான் கல்வி இலாகா மந்திரி என்பது ஞாபகம் இருக்கிறதே!

★ ராஜீவ் மந்திரி சபையை மாற்றும் வேகம் மந்திரவாதி செய்யும் தந்திர காட்சிகளைப் போல் சுறுசுறுப்புடன் இருக்கும். 1 வருடத்தில் மிக முக்கியமான வெளிநாட்டு உறவு போன்ற விஷயங்களில் கூட இலாகா மாற்றம் நோயாக பீடித்துள்ளது. இப்படி பந்தாடப்பட்ட மந்திரிகளில் ஒருவரை இன்னொருமந்திரி கேட்டாராம்

"புதிய இலாகாவிற்கு போயிருக்கிறீர்களே! என்ன செய்வதாக உத்தேசம்!"

"ஒரே ஒரு வேலைதான் செய்வேன். அடுத்த மந்திரி சபை மாற்றம் எப்படியும் சில மாதங்களில் நடைபெறும். அதற்காகக் காத்திருப்பேன்."

★ ஜெயேந்திரர் — காஞ்சிலிருந்து காணமற் போய் கிடைத்தவர். தண்டம் என்னும் அடையாள கோலை காஞ்சியில் தவறி வைத்துவிட்டு தலைகாவேரிக்கும் போய்விட்டார். ஒரே பரபரப்பாக இருந்தது. தண்டம் பிரிந்தால் எல்லாமே பிரிந்ததாகப் பொருளாம். பிறகு அந்த தண்டத்தை பெரியவர் கொடுத்தனுப்பப் பெற்றுக் கொண்டாராம். அதற்கு ஜெயேந்திரர் கூறிய பதில் :

"தண்டத்திலிருந்த மந்திர சக்தியை தனது உடலில் பாய்ச்சிக் கொண்டேன். பிறகு தண்டம் வந்தபின் உடலிலிருந்த மந்திர சக்தியை மீண்டும் தண்டத்தில் பாய்ச்சினேன்." இவரைவிட நம்மை யாரும் பைத்தியக்காரர்களாக்க முடியுமா?

— டி. ராஜசேகர்

FREE E - BOOKS , www.thamizham.net.,

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்

சுட்டி பதிவு எண் : TN/MS(N)/317



# குடிதண்ணீர் இல்லாத கிராமங்கள்

| மாநிலம் | எண்ணிக்கை |
|---|---|
| மஹாராஷ்ட்ரா | 38612 |
| உத்திரபிரதேசம் | 23116 |
| மத்தியபிரதேசம் | 12418 |
| ஒரிசா | 9675 |
| பஞ்சாப் | 8480 |
| மே. வங்காளம் | 7744 |
| பீஹார் | 5121 |
| ஆந்திரபிரதேசம் | 5014 |
| குஜராத் | 4062 |
| அஸ்ஸாம் | 3763 |
| ராஜஸ்தான் | 3624 |
| கர்நாடகா | 3429 |
| மேகாலயா | 2848 |
| ஹிமாச்சல் பிரதேசம் | 2566 |
| ஜம்மு & காஷ்மீர் | 2058 |
| திரிபுரா | 1633 |
| ஹரியானா | 1244 |
| மணிப்பூர் | 522 |
| நாகலாந்து | 506 |
| மிஜோராம் | 465 |
| சிக்கிம் | 38 |
| கோவா | 21 |
| பாண்டிச்சேரி | 20 |
| கேரளா | 1 |

❋ தமிழ்நாட்டைப் பற்றி தகவல் இல்லை. ஒருவேளை தண்ணீர் இல்லாத மாநிலமோ?!

நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ், AUG 15, 1987

தகவல் : பம்பாய் புதியவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,